(6 pages) **Reg. No. : .......................................**

**Code No. : 22051** **Sub. Code : J 1 TL 41/ S 1 TL 41**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2021.

Fourth Semester

பகுதி I — தமிழ்

பொதுத் தமிழ் — தாள் IV

(For those who joined in July 2016 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. குறுந்தொகையில் எந்தப் பூவிலிருந்து தேனீ தேன் எடுப்பதாகக் கூறப்படுகிறது?

   (அ) குறிஞ்சிப்பூ (ஆ) முல்லைப்பூ

   (இ) நெய்தல்பூ (ஈ) பாலைப்பூ

2. குமண வள்ளலுக்குரிய மலை எது?

   (அ) பறம்பு மலை (ஆ) சென்னி மலை

   (இ) குடகு மலை (ஈ) முதிர மலை

3. ‘கூ’ என்ற ஓரெழுத்து ஒரு மொழியின் பொருள் யாது?

(அ) சோலை (ஆ) மன்னன்

(இ) ஆறு (ஈ) பூமி

4. ‘அசடு’ என்ற வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

(அ) கள்வன் (ஆ) அறிவாளி

(இ) பேதை (ஈ) இளையவன்

5. கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் செல்லும்போது உடன்வந்தவர் யார்?

(அ) மாதரி (ஆ) கவுந்தியடிகள்

(இ) அறவண அடிகள் (ஈ) தேவந்தி

6. ‘புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி’ என்று பாடியவர் யார்?

(அ) மாணிக்கவாசகர் (ஆ) திருநாவுக்கரசர்

(இ) திருஞானசம்பந்தர் (ஈ) சுந்தரர்

7. “வக்கீல் மாதிரி வயனமா பேசத்தான் கத்துக்கிட்டே வாழ்க்கையை கத்துக்கிடலே” — யார் கூற்று?

(அ) திவ்யா (ஆ) பாலகுரு

(இ) கனகவல்லி (ஈ) நித்யா

8. 'நடைபாதை நம்பிக்கை நட்சத்திரங்கள்' என்னும் நாடகத்தில் காய்கறி விற்கும் பெண்ணின் பெயர் யாது?

(அ) சென்னம்மாள் (ஆ) அழகம்மாள்

(இ) பொன்னம்மாள் (ஈ) வள்ளி

9. கீழ்க்காணும் நூல்களில் அகம்சார்ந்த நூல் எது?

(அ) கலித்தொகை (ஆ) புறநானூறு

(இ) பதிற்றுப்பத்து (ஈ) சிறுபாணாற்றுப்படை

10. குறுந்தொகையைத் தொகுப்பித்தவர் யார்?

(அ) பூதனார் (ஆ) பூரிக்கோ

(இ) கோவர்த்தன் (ஈ) பதுமனார்

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

11. (அ) நும் பாடப்பகுதியில் தலைமகள் கூற்றில் அமைந்த குறுந்தொகைப் பாடல்களின் கருத்துக்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) நற்றிணைத் தலைவன் பாங்கனிடம் கூறிய செய்தி யாது?

12. (அ) ஐந்திணைகளுக்குரிய உரிப்பொருள்கள் யாவை?

(அல்லது)

(ஆ) வெட்சித் திணை — குறிப்பு வரைக.

13. (அ) எகிப்தின் அலெக்சாந்திரியா என்னும் பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட இந்தியப் பொருட்கள் யாவை?

(அல்லது)

(ஆ) 'மனித நேயமே முதல் மதம்' — இக்கூற்றினை நிறுவுக.

14. (அ) அழுக்குப்படாத அழகு என்னும் நாடகத்தில் காணப்படும் சமூகச் சிந்தனையை ஆராய்க.

(அல்லது)

(ஆ) 'நடைபாதை நம்பிக்கை நட்சத்திரங்கள்' என்னும் நாடகத்தில் பண்ணையார் சச்சிதானந்தத்தின் பாத்திரப்படைப்பினைத் தருக.

15. (அ) நற்றிணை — குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) குறிஞ்சிப்பாட்டு பற்றி விளக்குக.

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) 'நிரை செலல் இவுளி' எனத் துவங்கும் அகநானூற்றுப் பாடற் கருத்தினைத் தருக.

(அல்லது)

(ஆ) தோழிக்கு உரைத்த பத்தில் காணப்படும் அகச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. (அ) கைக்கிளை, பெருந்திணை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வஞ்சி, காஞ்சி ஆகிய புறத்திணைகளை விவரிக்க.

18. (அ) சிலப்பதிகாரத்தில் காணலாகும் அரசியல் பற்றி விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியத்தில் அறம் பற்றி ஆராய்க.

19. (அ) உறவுப் பின்னல் என்ற நாடகத்தில் டாக்டர் கோபாலின் பண்பு நலன்களை ஆராய்க.

(அல்லது)

(ஆ) 'நடைபாதை நம்பிக்கை நட்சத்திரங்கள்' என்னும் நாடகத்தில் காணப்படும் வாழ்வியல் சிக்கல்களை எடுத்துரைக்க.

20. (அ) சங்க இலக்கியத்தின் சிறப்புக்களை ஆராய்க.

(அல்லது)

(ஆ) ஆற்றுப்படை நூல்கள் பற்றி விவரிக்க.

———————